Gnanalayam - The Wisdom Temple
(a unit of Light Bridge Foundation)
No: 27, Jeeva Street, Muthirayarpalayam, Pondicherry 605009, INDIA.

**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ரேணுகா தேவியின் மந்திர உபதேசம் குறித்து ஆறுமுகனார் உரைத்தது

ஆறுமுகா! ஆறுமுகா!!
அன்பிற்கினிய ஆறுமுகா!
அகிலம் காத்திடும் ஆறுமுகா!
அன்னையின் மைந்தனே ஆறுமுகா!
விண்மீனாய் திகழ்பவனே ஆறுமுகா!
வினைகளையே அகற்றிடுவாய் ஆறுமுகா!
நற்கதியே அருளிடுவாய் ஆறுமுகா!
நிர்மலத் தன்மையினை ஈந்திடுவாய் ஆறுமுகா!
சூட்சமமாய் நிறைந்திருப்பாய் ஆறுமுகா!
சூன்யமதனை உணர்த்திடுவாய் ஆறுமுகா!
பணிகின்றோம்! போற்றுகின்றோம்!! ஆறுமுகா!!!
என்றென்றும் காத்திடுவாய் ஆறுமுகா!
அருகினிலே நிலைத்திடுவாய் ஆறுமுகா!
அருள்மழை பொழிந்திடுவாய் ஆறுமுகா!

அன்னையரே! அன்னையரே!! ஆரூயர் அன்னையரே!! புவனம் என்னும் பூமித்தாய் உயிர்களையே ஏற்றிட்டார். உயிர்களையே ஏற்றதினால் நஞ்சுகளும் சூழ்ந்திட்டன. நஞ்சுகளே பரவி நின்றால் சிதிளமாகும் புவனமது. சிதிளமாகும் புவனமது புணரமைப்பும் கண்டுவிடும். புணரமைப்பு நிகழ்ந்திட்டால் புத்துணர்ச்சி பெருகிவிடும். புத்துணர்ச்சி பெருகி நின்றால் சத்யயுகம் மலர்ந்துவிடும். சத்யயுகம் மலர்ந்திட்டால் புவனமாதா மகிழ்வுறுவாள். புவனமாதா மகிழ்வுற்றால் உயிர்களையே ஈன்றிடுவாள்.

Copyright © 2019 Gnanalayam 

காலத்தின் சுழற்சியிலே பூமிக்கும் நிலைமாற்றம் உண்டு. இன்பமும் துன்பமும் புவனமாதாவின் நிலைகளாகும். இன்ப துன்ப நிலை கடந்தால், இயற்கை நியதி புலப்படுமாம். இயற்கையின் நியதி உணர்ந்தால் இன்ப துன்பமும் மறைந்திடுமாம். பற்றுகளை துறந்து நின்றால் பலன்களும் துறக்கப்படும், பலன்களை ஏற்றிடாத கர்மங்களால் பற்றுகளும் துறக்கபடும். பற்றுகளை துறந்திட்டால் புவி வாழ்வு சிறந்துவிடும். உணர்வு கொண்டு பரம ஆற்றலையும் ஏற்றுவிடும்.

பரமனின் மீது கொண்ட பற்றின் மூலம் புவி வாழ்வு சிறந்து விளங்கிடும். புவியினை விடுத்து ஈசனை அடைந்தால் நிலைகள் யாவும் மாற்றமடையும். விண்ணிலே நிலைத்திடும் ஆன்மாக்கள் புவியின் மீது பற்றுக்கொண்டே செயல்படும். புவிவாழ் உயிர்களே விண்மீன்களின் குறிக்கோளாகும். ஆன்மாக்கள் மீண்டுவிட ஆற்றல்களை நல்குவதே விண்மீன்களின் பணிகளாகும்.

புவியினிலே வாழும் வரை மானுட ஆன்மாக்கள் பரமனை நோக்கியே பயணிக்கும். ஒளிப்பாலம் எனும் வழிதடமும் உருவாக்கும். பரமனை அடைந்துவிட்டால் பரமசுகம் பெற்றுவிடும். ஆன்மாக்கள் ஒளிர்ந்து நின்றால் விண்மீனாய் நிலைத்திருக்கும். விண்மீனின் இயக்கம் யாவும் மானுட ஆன்மாவினை சார்ந்திருக்கும். ஆன்மாவின் விடுதலையே விண்மீனாகும். பிற ஆன்மாக்களின் விடுதலைக்கும் விண்மீன்கள் பெரும் தொண்டாற்றும். அன்னையே! யாமும் ஓர் விண்மீனே என்றுணர்க.

தவிப்புறும் மானுட ஆன்மாக்களை காத்தருள்வதே விண்மீன்களின் பணியாகும். ஒரு ஆன்மாவின் விடுதலையே அம்மானுடருக்கு கிட்டும் உயரிய பரிசாகும். உயரிய பரிசினை பெற்றவர், அதனை பிறருக்கு அருள்வதே மிகவும்

உயரிய செயலாகும். அருளினை பகிர்வதினால், அருளே பரவும். நற்சொற்களை பகிர்ந்தால் நற்சொற்களே சுய செவியினையும் அடையும். நற்செயல்களே நல்வினை பதிவுகளை உருவாக்கும். வாழும் முறைமை அறிந்து வாழ்வதே மேன்மை நிலைகளை நல்கிடும். முறைமை அறியாது வாழ்ந்திட்டால் அழிவினையே ஏற்றிட இயலும்.

வாழ்வின் முறைமையை வாழ்ந்திட்ட ஆன்மாக்களிடம் பெறுவதே நன்றாகும். உயர்வாழ்வு வாழ்ந்திட்ட ஆன்மாக்கள் விடுதலை அடைவர் எனில், விடுதலை அடைந்த ஆன்மாக்களே வாழ்வின் முறைமையையும் உணர்;த்திடுவர். எதனைப் பெற வேண்டும் என்றே எண்ணுகின்றோமோ அதனை எவரிடமிருந்து பெறவேண்டும் என்பதனையும் அறிய வேண்டும். எவர் ஒருவர் தான் பெற எண்ணியதை, அவ்வாற்றல்தனை பெற்றவரிடமிருந்து ஏற்றுவிட முனைகின்றாரோ அவருக்கே அக்கலை சித்திக்கும்.

கலியுலகினிலே அறியாமையின் காரணமாக மானுடர்கள் மாற்றுச் செயல் ஆற்றுகின்றனர். ஆன்ம விடுதலை அடையாத மானுடர்களை குருவாய் ஏற்று ஆன்ம விடுதலைதனை அருளுமாறு வேண்டுகின்றனர். எனினும், பயணிக்கும் மார்;கம் சிறந்ததே என்னும் காரணத்தினால் பலன் கிட்டும், பயணமும் தொடர்ந்துவிடும். பயணம் நிறைவடைய வேண்டுமெனில் முக்தி பெற்ற ஆன்மாவினையே நாடிடல் வேண்டும்.

கலியின் எல்லையில் புவியின் புணரமைப்பு ஆனது துவங்கிய நிலையில், ஆன்மாவினை அறிந்திட விட முனைவோரும், ஆன்மாவினை விடுவிப்பதே வாழ்வின் நோக்கம் என்று உணர்பவருமே கலியினை வென்று விண் அடைவர். சத்திய யுகம் மலர்ந்திடவும் உதவிடுவர். வாழ்வின் நோக்கத்தினை அறியாமலும், அதனை ஏற்காமலும் வாழ்பவர்கள் பெரும் துன்ப நிலைகளை எய்திடுவர். ஆன்மாக்களை அழிவினின்று காத்திடவும், மானுடர்களின்

Gnanalayam

துயர்களை நீக்கிடவும், விண்மீன்களாய் வசிப்போர் யாவரும் புவியுலகினிலே தங்களது ஆற்றல்களை நிலை நிறுத்தியே செயல்புரிகின்றனர்.

இதனை உணர்ந்து ஏற்றுவிட்டால் நற்கதி விளைந்திடும். மானுட குலம் உய்வுறவே போராடும் அன்னையானவர் ரேணுகா அன்னையின் பரிபூரண ஆற்றல்களை ஏற்றே இயங்கத் துவங்கினார். எமது ஆட்சியின் யாம் புறத்தினிலே நிலை நின்று அன்னைக்கு உதவிகள் பல புரிந்திட்டோம். ரேணுகா அன்னையானவர் குரு அன்னையின் அகத்தினிலே, ஆதி சக்தி என்னும் ஒற்றை அணுவாய் நிலைத்தே இயக்கத்தினை நல்குகின்றார்.

பெரும் மாற்றத்தினை தேவியின் ஆட்சியானது நல்கிடும். ஆற்றல் பெருக்கம் என்பது மானுட ஆன்மாக்களை நீட்டிடவே உதவிடும். வட்ட மலர்கள் பெருகுவதுடன் உணர்தல் என்னும் நிலையே உயர்ந்தோங்கிடும். தேவியின் கருணையை பூரணமாய் உணருகின்ற மானுடர்களே திரைகளை நீக்கி திவ்ய ஜோதியாம் ஆன்மாவின் தரிசனம் கண்டிடுவர். அன்னையே, நிகழ்கின்ற காலச் சூழல் என்பது மானுடர்களின் அறியாமை திரையினை வெளிப்படுத்துகின்றது. ஆன்மாவினை அறியாது வாழ்ந்திட்ட நிலையினை மானுடர்கள் உணருகின்ற கால நேரம் என்பது இத்தருணமே ஆகும்.

புறச்சூழல்களை கணித்திட இயலாது வாழும் மானுடர்கள் அகச் சூழலை உணர்ந்துவிட முனைவது இயற்கையே. புறவாழ்வு என்பது நிலையற்றதாகும் எனும் சிந்தனை எத்தருணத்தில் உதிக்கின்றது. எண்ணிய செயல்கள் ஈடேறாத நிலையிலும், புறத்தேடுதல்களும், அதன் மூலம் கிட்டும் இன்ப நிலைகளும் சித்திக்காத தருணங்களிலும், புறவாழ்வு என்பது மாயையை என்கின்ற சத்திய நிலையானது புலப்படுகின்றது. ஒரு மானுடன் தனது இயக்கத்திற்கான ஆற்றல்கள் என்பன யாது என்றே பூரணமாய் உணர வேண்டும். புறத்தினிலே

ஈட்டுகின்ற பொருளின்றி வாழ்ந்திட இயலும் ஒரு மானுடனால் அகத்தினிலே ஈட்டுகின்ற ஆன்மாவின் அருளின்றி வாழ்;ந்திட இயலாது.

ஆன்மாவின் எரிபொருள் எனப்படும் கனிம வள ஆற்றல்களே, ஆன்மாவின் அருளாய் மலர்கின்றது. ஆன்ம எரிபொருளானது ஒரு மானுடனுக்கு சீராய் கிட்டவில்லை எனில் உடலிலே பெரும் துன்ப நிலைகள் உருவாகும். இறுதியில் உயிரானது உடலை விட்டு பிரிந்தும் சென்றுவிடும். எனில் இன்றியமையாத ஆற்றல் என்பது ஆன்ம ஆற்றல்களே ஆகும். மானுடர்கள் யாவரும் புறவாழ்வே இன்ப நிலையினை அருளிடும் என்ற சிந்தனையிலே மூழ்கி மாயையிலே திளைத்தே வாழ்கின்றனர். கலியின் எல்லை என்பதே மாயத்தின் உச்சமாகும்.

எனினும் கலியின் எல்லை ஒன்றே மாயத்திரைகளை நீக்கிடவும் வழிவகுக்கும். புற இன்பங்கள் யாவும் நிலையற்றவை என்றே உணரத் துவங்கினால் மாத்திரமே அகமார்க்கம் புலப்படும். என்றும் பேரானந்த நிலையானது நிலைத்திட அகமார்க்கமே உதவிடும். ரேணுகா அன்னையின் ஆட்சி காலத்தின் துவக்க நிலையே மாயையை நீக்கி அருள்வதாக அமைந்துள்ளது. எமது ஆட்சியில் யாம் விழித்திரைகளிலே பதிந்திட்ட மாயைதனை விலக்கியே அருளிய நிலையில் உட்திரைகளின் மாய ஆற்றலை ரேணுகா அன்னையே நீக்கியருளிடுவார்.

ஓசையின் வடிவுகொண்ட உபதேசம் என்பது உயிர் ஆற்றலை பெருக்கிடும். அமிலக் கழிவுகளை அகற்றிடும். திரைகள் நீங்கினால் ஆன்ம ஒளியும் புலப்படும். மந்திர ஓசை எனப்படும் சொற்களின் தொகுப்பானது எவ்விதம் திரையினை நீக்கிடும் என்றே சிந்தனை புரிதல் வேண்டும். கலியுக மானுடர்கள் அறிவியல் பூர்வமான விளக்கங்களையே ஏற்றிடுவர். புற அறிவியலோடு ஒப்பிட்டு நோக்கிடுவர். புறத்தினிலே தெளிவான விடைதனை அறிய இயலவில்லை எனில், அகமார்க்கமே மாயை என்றும், ஆன்மா என்பது எங்கும்

இல்லை என்றும், இயக்கம் என்பது தன்னிச்சை செயலாய் நிகழ்கின்றது என்றும், எவரும் காரணமாய் அமைந்துவிட இயலாது என்றும் தீர்மானிக்கின்றனர்.

அறியாமையே அறிவினை ஞானமாய் மலர்ந்துவிட தடைகள் விதிக்கின்றன. ஓசையின்றி இயக்கம் மலர்ந்திட இயலாது என்ற சிந்தனையினை ஏற்றிடல் வேண்டும். ஏனெனில் இயக்கத்தின் விளைவாய் உருவாவது ஓசையே ஆகும். மானுடர்களின் இயக்கம் மூலமும், மற்ற உயிரினங்களின் மூலமும் புவிக்கோளினிலே ஓசையானது உருவாகின்றது. உயிர்கள் அற்ற புவிக்கோளினால் இயங்கிட இயலாது. எனில் அனைத்து உயிர்களின் இயக்கமே உயரிய ஓசையாக மலர்கின்றது.

அவ்வோசையினை ஆற்றலாய் ஏற்றே புவிக்கோளும் சுழல்கின்றது. புவியின் சுழற்சியின் மூலமும், மற்ற கோள்களின் சுழற்சியின் மூலமும் அற்புத ஒளியானது உருவாகின்றது. கோள்கள் அனைத்தும் சீராய் இயங்குகின்றன என்ற உணர்வினை அதனின்று வெளிப்படும் ஓசை ஒன்றே வெளிப்படுத்தும். சூரியக் கோளான பரமாத்மாவும், தனது இயக்கம் என்னும் சுழற்சியின் மூலமும், உராய்தலின் மூலமும் பெருத்த ஓசையினை உருவாக்கிடுவார்.

பராமாத்மாவின் இயக்கமே ஆற்றல்களை நல்கிடும். எனில் ஓசை ஒன்றே இயக்கத்தின் ஆதாரமாகும். பொருட்களின் இயக்கமும் ஓசையினை வெளிப்படுத்தும். எனில், ஓசையே இயக்கத்தினை உணர்த்துகின்ற மூல ஆற்றல் என்பதனை அனைவரும் உணர வேண்டும்;.

மந்திர ஒலி என்பது சொற்களை இணைத்து பிணைக்கப்பட்ட ஓர் இயக்கமாகும். இயக்கம் நிகழ்ந்தால் ஓசை தோன்றும். எனில் ஓசையை உருவாக்கினால் இயக்கமும் மலரும் என்பதே நியதியாகும். ஈசனின்

இயக்கத்தின் மூலம் ஓசை உருவாகி அதன் மூலம் பிற கோள்களுக்கும், உயிரினங்களுக்கும் ஆற்றல்கள் யாவும் பகிரப்படுகின்றன. எனில் ஓசையை உருவாக்குவதன் மூலம் ஈச ஆற்றல்களை ஈர்த்து பெற்றிட இயலும் என்பதனை அனைவரும் உணர வேண்டும்.

அன்னையானவர் உருவாக்கியே அருள்கின்ற ஓசையானது ரேணுகா அன்னையின் அருளாசியாகும். உயர் ஆன்மாக்களின் இயக்கம் என்பது பெருத்த ஓசையினை உருவாக்கும். அதன் மூலம் உயிராற்றலானது பெருகிவிடும். ஆன்மாவின் ஆற்றல் எனப்படும் கனிமவள ஆற்றல்களே ஓசையினையும், இயக்கத்தினையும் நல்கும். ஓசையின் மூலமே ஆற்றலானது வெளிப்படுகின்றது.

அவ்வகையில் குருவாய் செயல்புரிகின்ற அன்னையானவர் ஓசையினை உருவாக்கி மந்திர ஒளியலைகளாய் உருமாற்றி, ஆன்ம ஆற்றல்களை ஈர்த்திடும் மார்க்கம்தனை மானுட ஆன்மாக்களுக்கு உணர்த்திடுவார். மந்திர உபதேசம் என்பது ஆன்ம ஆற்றல்களை ஈர்த்திடும் ஓர் உயரிய மார்க்கமாகும். ஆன்ம ஆற்றல்கள் பெருகினால் ஓசை என்பது உருவாகும். அதனைப்போன்றே ஓசையினை அதீதமாய் உருவாக்கினால் ஆன்ம ஆற்றல்களும் பெருகும். அவ்விதம் ஏற்கப்படும் மந்திர உபதேசம் என்பது செவிகளையே நாடி சென்றிடும்.

ஒளி என்கின்ற தீபச்சுடரின் மூலம் ஏற்றிட்ட தீட்சையானது விழிகளை தூய்மையுறுத்தியது போன்றே, செவிகளை தூய்மையுறுத்திட ஓசை எனும் மந்திர உபதேச தீட்சையானது அருளிவிடும். செவியின் உட்புற திரைகளே உயிரின் கூடாகவும் நிலைத்துள்ளது. உயிரின் கூடென்னும் ஏழாம் திரையானது விலகினால், ஆன்ம ஆற்றல்கள் யாவும் முழுவதுமாக உடலினிலே பாய்ந்துவிடும் என்றுணர வேண்டும். மந்திர ஓசையினை உருவாக்கிய

ஆற்றலே ரேணுகா அன்னை எனில், அதனை உள்ஏற்று உபதேசிப்பவர் குரு அன்னையாவார்.

மந்திர உபதேசம் என்பது ஆன்ம ஆற்றல்கள் எனப்படும் கனிம வள ஆற்றல்களையும், ஐவகை மூலக்கூறுகளையும், அவற்றினை ஏற்றே அருளுகின்ற மூவிழைகளின் ஆற்றல்களையும் பூரணமாய் ஈர்த்தருளிடும். இம்மந்திர உபதேசம்தனை செவிகளின் மூலம் ஏற்றிட்டால் அவை முதன்மையாய் உயிரின் கூடு எனும் ஏழாம் திரையினை ஊடுருவியே உட்சென்றிடும். மந்திர ஓசையின் மூலம் ஆன்ம ஆற்றல்கள் பெரிதும் ஈர்;க்கப்படும். இதனை அட்சரமாகவும், சொற்களாகவும் உணர்ந்து ஏற்போர் அதன் ஆழ்ந்த பொருளினையும் உணர்ந்திடுவர்.

கோள்கள் யாவும் இயங்குவதன் மூலம் உருவாகும் ஓசைதனை மந்திர உபதேசமாய் ஏற்று சுயமாய் உருவாக்குவதன் மூலம் அனைத்து கோள்களின் ஆற்றலும் அகத்தினிலே பெருகிட காண்பர். மந்திர உபதேசம் தனை ஏற்று உருவேற்றிட முனைந்திட்டால் ஒவ்வொரு மானுடர்களின் ஆன்ம ஆற்றல் என்பது பெருகும். ஒரு தினமதிலே உருவாகும் அறுபது வகையான ஆற்றல்களும் மானுட சிரசினை அதீத அளவினிலே அடைந்திடும். தொடர் உருவேற்றம் என்பது மந்திர சொற்களின் மூலம் ஓசையாக உருமாறி இயக்கத்தினை துரிதமடையச் செய்திடும்.

மானுட மூளையின் ஆதாரமாய் விளங்கிடும் ஒற்றை அணுவும், தலைமைச் சுரபியும் அதீத ஆன்ம ஆற்றல்களால் நிறைந்திடும். தலைமைச் சுரபியானது தான் பெறுகின்ற அதீத ஆன்ம ஆற்றல்களை மற்ற பிற சுரபிகளுக்கு நல்கிட அவ்வாற்றலானது உடல் உறுப்புகளை சென்று அடையும். ஆற்றல் பரிமாற்றம் என்பது குருதியின் மூலமே நிகழ்கின்றது. எனில் குருதியின் ஓட்டத்தினை கண்காணித்திடல் வேண்டும். மந்திர ஓசையினை உருவேற்றிடும் தருணத்தில்

குருதியின் வெப்ப நிலை கூடுவதும், குருதியின் துரிதமான பயணமும் ஒவ்வொரு மானுடராலும் உணரப்படும். குருதியினை உணர வேண்டுமெனில், நரம்பிழைகளையும் உணர வேண்டும். குருதி பயணிக்கும் வழித்தடமான நரம்பிழைகள் யாவும் தனது அடைப்புகளை நீக்கி வீரியமாய் இயங்குவதனையும் உணரலாம். ஓசையின் தாத்பர்யங்களை அனைவரும் உணர வேண்டும் எனில் ரேணுகா அன்னையின் மந்திர உபதேசம்தனை ஏற்று பயின்றிடல் வேண்டும்.

எந்த ஒரு மந்திர ஓசைகளுமே உயரிய பலனை நல்கிவிடும். இறையாற்றலை துதித்து எழுப்பப்படும் ஓசையினை உடைய சொற்கள் அனைத்தும் வீரியமாய் செயல்புரியும் என்பது சத்திய நிலையே ஆகும். இருப்பினும் கலியின் எல்லையில் நிகழ்கின்ற உயரிய போராட்டம் தனை வென்றிட ரேணுகா தேவியின் வெப்ப ஆற்றல் ஒன்றே உதவிடும். நரம்பிழைகளிலே படிந்துள்ள உப்புகள் எனும் நச்சு கழிவுகள் உருகி வெளியேறிட அதீத வெப்ப ஆற்றலே உதவிடும்.

அதீத வெப்ப ஆற்றலினை நல்குவதே ரேணுகா அன்னை என்னும் ஆதி சக்தியின் முதன்மை பணியாகும். சத்திய யுக வித்துகளின் சேகரிப்பு எனும் நிகழ்வானது அன்னையின் ஆற்றல் கொண்டே நிகழ்ந்தேறிடும். இத்தீட்சை என்னும் மந்திர உபதேசத்தினை ஏற்று அதனை வீரியமாய் உட்சரித்து உருவேற்றும் தருணங்களில் சிரசின் அமிலக் கழிவுகளும் நீக்கமுறும்.

மூளைப் பகுதி சூடேற்றம் காண்பதனை அனைவரும் உணர்ந்திடுவர். மேலும் கழிவுகள் யாவும் விழி நீராகவும் பெருகிவிடும், பல்வேறு மாற்றம் முறைகளிலும் நீக்கமுறும். பல்வேறு உடற்பிணிகள் கலையப்படும். உடலில் பொலிவு தோன்றிடும். அறிவு பெருகிடும். இயக்கம் எளிதாய் மலர்ந்திடும். மேலும் ஞானம் பெருகிடவும் உதவிடும். ஆன்ம தரிசனம் கண்டிடவும், ஆன்மாவின்

Gnanalayam

விடுதலைக்கும் பேருதவி புரிந்திடும். தீட்சையினை ஏற்று ஆன்ம விடுதலை காண்போர் யாவரும் உணர்வின் உச்ச நிலையினை எய்திடுவர். பரமாத்மாவின் இயக்கத்தினை உணர்ந்து ஒன்றென கலப்புறுவர். ஈசனருள் பரவி யுகமாற்றமும் நிகழ்ந்தேறிடும். அகத்தியரின் உயரிய பணியும் இனிதாய் நிறைவுறும். ஈசனருள் பெற்று இன்புற்று வாழ்ந்திடவே வாழ்த்துகின்றோம்.

*******

Gnanalayam